# வாழ விடுங்கள் 5

காட்சி 1

| | | |
|---|---|---|
| காலம் | : | விடியற்காலை |
| இடம் | : | காந்தன் இல்லம் |
| பாத்திரங்கள் | : | காந்தன், காந்தனின் மனைவி வள்ளி. |

**காந்தன்** : வள்ளி, நான் விறகு வெட்டக் காட்டுக்குப் போக வேண்டும். சாப்பிட ஏதாவது கொண்டு வா.

**வள்ளி** : இதோ வருகிறேன்.
(வள்ளி கொடுத்த சாப்பாட்டைச் சாப்பிட்ட பின் காந்தன் காட்டுக்குச் செல்கிறான்)


காட்சி 2

| | | |
|---|---|---|
| காலம் | : | காலைப்பொழுது |
| இடம் | : | காடு |
| பங்குபெறுவோர் | : | காந்தன், மாமரம் |

**(காந்தன் மரத்தை வெட்டக் கோடரியை ஓங்குகிறான்)**

**மாமரம்** : ஐயா வெட்டாதீர்கள்! என்னை வெட்டாதீர்கள்!

**காந்தன்** : மரமே! என் கை நடுங்குகின்றது. ஆனாலும் உன்னை வெட்டிக்கொண்டு போகாவிட்டால் என் குடும்பம் பட்டினிதான் கிடக்க வேண்டும். அதனால் உன்னை...





இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**மாமரம்** : ஐயா, என்னிடமிருந்து விழும் குச்சிகளை எடுத்துச் செல்லுங்களேன்.

**காந்தன்** : குச்சிகளை யார் வாங்குவார்கள்?

**மாமரம்** : உங்கள் தேவைக்கு எங்களை அழிப்பதா? எங்களையும் வாழ விடுங்கள். வெட்டாமல் விட்டால் தொடர்ந்து பயன் தந்து உதவுவோம் அல்லவா?

**காந்தன்** : அதெல்லாம் முடியாது. உன்னை...

**(மரத்தின் ஒரு பகுதியை வெட்டிக் கொண்டு வீட்டிற்குச் செல்கிறான்)**

**காட்சி 3**

| | |
|---|---|
| **காலம்** | **: இரவு** |
| **இடம்** | **: காந்தன் இல்லம்** |
| **பாத்திரங்கள்** | **: காந்தன், வள்ளி, காந்தனின் மகன் பிரவீன்** |

**காந்தன்** : வள்ளி. இன்றைக்கு மரம் வெட்டப் போன போது காட்டில்...

**வள்ளி** : என்னங்க, என்ன நடந்ததுங்க?

**காந்தன்** : ஓர் அதிசயம்! மாமரம் ஒன்று என்னுடன் பேசியது.

**வள்ளி** : என்ன! மரம் பேசியதா? வேடிக்கையா இருக்குதே!

**பிரவீன்** : அப்பா. மரம் என்ன பேசியது?

(காந்தன் காட்டில் நடந்ததை விவரமாகக் கூறினான்)

**பிரவீன்** : பாவம் அந்த மரம்! நீங்கள் வெட்டாமல் வந்திருக்கலாமே!

**காந்தன்** : அந்த மரத்த நெனச்சா பாவமா இருக்குது. மரம் வெட்டுவதை விட்டுவிட்டு வேறு ஏதாவதொரு தொழிலைச் செய்யலாம்.

**வள்ளி** : நீங்களும் உங்க இரக்கமும்... போய் வேலையைப் பாருங்க!

**காட்சி 4**

| | |
|---|---|
| **காலம்** | **: நள்ளிரவு** |
| **இடம்** | **: காந்தன் இல்லம்** |
| **பாத்திரங்கள்** | **: காந்தன், வள்ளி, பிரவீன்** |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

(தூங்கிக் கொண்டிருந்த காந்தன் திடீரென்று வெட்டமாட்டேன், வெட்டமாட்டேன் என்று அலறிக் கொண்டே எழுகிறான். சத்தம் கேட்டு வள்ளியும் பிரவீனும் விழித்துக் கொள்கின்றனர்.)

**வள்ளி** : என்ன நடந்தது தூக்கத்தில் ஏன் கத்தினீங்க ?

**காந்தன்** : வள்ளி, நான் அசந்து தூங்கிக் கொண்டிருந்த பொழுது கனவிலே ஒரு தேவதை மாமர வடிவில் வந்தது. ‘உன்னுடைய முன்னோர்கள் எங்களை நட்டுக் குழந்தை போல் வளர்த்தனர். நாங்கள் உங்களுக்கு காயும் கனியும் மருந்தும் தந்து உதவுகிறோம். எங்களால் நல்ல மழையும் பொழிகிறது. அப்படிப்பட்ட எங்களை வெட்டி அழித்துவிட்டு உன் குழந்தைகளுக்கு எதை விட்டுச் செல்லப் போகிறாய்? என்று கேட்டது. நான் வெட்ட மாட்டேன். வெட்ட மாடடேன் என்று சொன்னேன்.

**பிரவீன்** : அப்படியா! இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்?

**காந்தன்** : என்ன செய்யப்போகிறேனா? மரம் வெட்டுவதை விட்டுவிட்டு. மரத்தை நட்டு வளத்தைப் பெருக்குவேன். நாளைக்கு முதல் வேலையாக நாம் மரம் நடுவோம்! வளம் பெறுவோம்!

**உரையாடலில் வரும் பதங்களும் அவற்றுக்கான பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விறகு | - | දර | கனவு | - | සිහිනය |
| காடு | - | කැලය | தேவதை | - | දේවතාවිය |
| குடும்பம் | - | පවුල | திடீரென்று | - | උන්හිටි ගමන් |
| பட்டினி | - | බඩගින්න | | | |
| குச்சிகள் | - | කෝටු | | | |
| தொழில் | - | රැකියාව | | | |
| தூக்கம் | - | නින්ද | | | |
| குழந்தை | - | ළදරුවා | | | |
| மருந்து | - | බෙහෙත් | | | |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**கிரகித்தற் பயிற்சிகள்.**


பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියන්න.

1. காந்தன் மரம் வெட்ட எங்கே சென்றான்?
2. மாமரம் காந்தனிடம் என்ன கூறியது?
3. மரத்தை வெட்டுவதற்குக் காந்தன் கூறிய காரணம் என்ன?
4. மாமரம், தன்னை வெட்டக் கூடாது என்பதற்காகக் காந்தவிடம் என்ன சொல்லியது?
5. தேவதை கனவில் வரவில்லை என்றால் என்ன நேர்ந்திருக்கும்?
6. தேவதை கனவில் வந்து ''நீ உனக்கு விருப்பமானதைக் கேள்.''எனக் கூறினால் என்ன கேட்பீர்கள்?

## செயற்பாடு I

பின்வரும் வாக்கியங்களைக் கொண்டு இக்கட்டங்களைப் பூர்த்தி செய்க.

1. ஓரெழுத்துச் சொல்.
2. விறகு வெட்டச் சென்ற இடம்.
3. கந்தன் வெட்டச் சென்றது.
4. முன்னோர்கள் மரங்களை எதைப்போல் வளர்த்தனர்.
5. மரம் பேசியது.




| பேச்சுமொழி<br>කථන භාෂාව | | எழுத்துமொழி<br>ලිඛිත භාෂාව |
|---|---|---|
| இருக்குதே | - | இருக்கிறதே |
| நெனச்சா | - | நினைத்தால் |
| பாருங்க | - | பாருங்கள் |
| உங்க | - | உங்கள் |
| கத்தினீங்க | - | கத்தினீர்கள் |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## அறிவித்தல்

**சிரமதானம்**

பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரியில் ஒரு சிரமதான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

காலம் - 2009 . 01 . 10

இடம் - பாரதி தமிழ் மகா வித்தியாலயம்.
இரத்தினபுரி

நேரம் - மு . ப . 9.00 மணி முதல்
பி . ப. 2 .00 மணி வரை

இந்த சிரமதானப் பணியில் தரம் 6 முதல் 13 வரையிலான வகுப்பு மாணவர்கள் தவறாது பங்கு பற்றவும்.

இப்படிக்கு,
அதிபர்.

## இரு மொழிக்கும் பொதுவான சொற்கள்.
## සිංහල හා දෙමළ භාෂාවේ පොදු වචන.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிக்கும் பொதுவான சொற்கள் பல உபயோகத்தில் உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| அம்மா | - | අම්මා |
| அக்கா | - | අක්කා |
| மாமா | - | මාමා |
| கடை | - | කඩය |
| கண்ணாடி | - | කණ්නාඩිය |
| சீனி | - | සීනි |
| பருப்பு | - | පරිප්පු |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| பேனை | - | පෑන |
| பென்சில் | - | පැන්සල |
| குடை | - | කුඩය |
| மேசை | - | මේසය |
| மாலை | - | මාල |
| தொப்பி | - | තොප්පිය |
| இடியப்பம் | - | ඉඳිආප්ප |
| கடலை | - | කඩල |
| வட்டக்காய் | - | වට්ටක්කා |
| பப்படம் | - | පපඩම් |
| சிரேஷ்ட | - | ශ්‍රේෂ්ඨ |
| கனிஷ்ட | - | කණිෂ්ඨ |
| தகரம் | - | ටකරම |
| போத்தல் | - | බෝතලය |
| தோடம்பழம் | - | දොඩම් |
| பெட்டி | - | පෙට්ටිය |
| நரி | - | නරියා |
| தோசை | - | තෝසේ |
| வடை | - | වඩය |
| கோப்பி | - | කෝපි |

**செயற்பாடு I**

உமக்குத் தெரிந்த இவ்வாறான இரு மொழிக்கும் பொதுவான 10 சொற்கள் எழுதுங்கள்.

ඔබ දන්නා භාෂා දෙකට ම පොදු වචන විසිපහක් ලියන්න.